## வளர்நிலை - 5

## எனக்குப் பிடித்தமான பழக்கம்

‘காலையில் எழு, கடவுளைத் தொழு’ என்று நம் முன்னோர்கள் கூறியிருக்கிறார்கள். “**காலை எழுந்தவுடன் படிப்பு, பின்பு கனிவுதரும் நல்ல பாட்டு, மாலை முழுதும் விளையாட்டு, என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா**” என்று பாரதியார் கூறியுள்ளார். இந்தக் கருத்துகள் எனக்குப் பிடித்தமான கருத்துகள்; நான் பின்பற்ற விரும்பும் பழக்கங்கள்; விடியற்காலையில் நான் எழுந்து, மனத்தினாலும் வாக்கினாலும் இறைவனை வணங்குவது மட்டுமன்றித் தோட்டத்தில் இருக்கும் மலரையும் பறித்துவந்து இறைவனுக்குச் சூட்டுவேன். இதைத்தான் ஆண்டாள் அவர்கள், “**வாயினால் பாடி, மனத்தினால் சிந்தித்து, தூய மலர்களைத் தூவித் தொழுதால் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினுள் தூசாகும்**” என்கிறார். ஆம், பயன்படாத மாசாய் இருக்கும் தூசு நெருப்பினில் பட்டவுடன் அழிந்துவிடும். அதைப் போல் நம்மிடம் உள்ள தீய எண்ணங்கள் அழியும். அதனால் கடவுளைத் தொழுவதை என் பழக்கங்களுள் முதலாவதாய்க் கொண்டுள்ளேன்.

“**இன்றைய தினம் நடத்தப்பட்ட பாடத்தை இன்றே படி**; **அப்பொழுதுதான் தெளிவாய்ப் புரியும்; சில நாள் கழித்துப் படித்தால் புரிவது கடினமாய் இருக்கும்**,” என்று ஆசிரியர் கூறியுள்ளார். அதனால், அன்றைய பாடத்தை அன்றே படித்து விடுவது என் வழக்கம். பாடத்தில் சந்தேகம் ஏற்பட்டாலும் உடனே தெளிவு பெறுவதற்கும் வசதியாய் இருக்கும்.

பிற்பகல் பள்ளி முடிந்ததும் வீட்டிற்கு வந்து, வீட்டில் தாய் தந்தையர்க்கு உதவியாய்ச் சில வேலைகளைச் செய்வேன். அதன்பின், என்னுடன் படிக்கும் மாணவர்களோடு சேர்ந்து சடுகுடு, கண்டுபிடி, நீளம் தாண்டுதல் முதலிய விளையாட்டுகளை விளையாடுவேன்.

நம் முன்னோர் சொன்ன நெறியே எனக்குப் பிடித்த நெறியாய், அதைப் பின்பற்றுவதே எனக்குப் பிடித்த பழக்கமாய் இருக்கிறது.

நன்றி, வணக்கம்